செய்தி வெளியீடு எண்: 362 நாள் :04.07.2013

## ஆடி அமாவாசை சுற்றுலா

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஆடி அமாவாசை (06.08.2013) தினத்தன்று இராமேஸ்வரம் சென்று வர சுற்றுலாவினை ஏற்பாடு செய்துள்ளது.

**04.08.2013** அன்று மாலை 4.30 மணியளவில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், எண். 2, வாலாஜா சாலை, சென்னை–2 லிருந்து பேருந்து புறப்படும்.

**05.08.2013** அன்று இராமேஸ்வரம் சென்றடையும், அன்றைய தினம் திருப்புல்லானி, தேவிபட்டினம், இராமர் பாதம், அனுமன் பாதம், அக்னி தீர்த்தம், தனுஷ்கோடி ஆகிய இடங்களில் தரிசனம் செய்தல், மறுநாள்

**06.08.2013** காலை இறந்த முன்னோர்களுக்கு திதி செய்தல்.
காலை 10.00 மணிக்கு இராமநாத சுவாமி கோயிலில் வழிபாடு செய்தல் மதியம் 1.30 மணிக்கு மதிய உணவு முடித்து 2.00 மணியளவில் இராமேஸ்வரத்திலிருந்து திருச்சி வழியாக.

**07.08.2013** காலை 6.00 மணிக்கு சென்னை வந்தடைதல் இதற்கு கட்டணம் நபருக்கு ரூ. 2600/– (பெரியவர்) இருவர் பகிர்ந்துகொள்ளும் அறை, சிறுவருக்கு ரூ. 2200/– மற்றும் தனி அறை (பெரியவர்) ரூ.2900/– போக்குவரத்து, தங்கும் வசதி மற்றும் வழிகாட்டி சேவை உட்பட்டது.

## ஆடி கிருத்திகை சுற்றுலா

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆடி கிருத்திகை சுற்றுலாவை 31.07.2013 தினத்தன்று காங்கேய நல்லூர் முருகன் கோயில், வேலூர் வள்ளிமலை முருகன் கோயில் மற்றும் சிறுவாபுரி முருகன் கோயில் சென்று ஆலய தரிசனம் செய்து வர பின்வரும் சுற்றுலாவை ஏற்பாடு செய்துள்ளது.

### ஆடி கிருத்திகை சுற்றுலா விவரம்:

| | |
|---|---|
| 31.07.2013 | புறப்படும் நேரம் காலை 7.00 மணியளவில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தலைமை அலுவலகம், எண்.2, வாலாஜா சாலை, சென்னை–2 |
| | காலை 8.00 மணி சிற்றுண்டி (Motel Highway) |
| | காலை 11.00 மணி வேலூரில் உள்ள காங்கேய நல்லூர் முருகன் கோயில் மற்றும் பகல் 12.00 மணிக்கு வள்ளிமலை முருகன் கோயில் ஆலய தரிசனம் (1.30 மதிய உணவு) |
| | பகல் 2.00 மணிக்கு புறப்பட்டு 5.00 மணிக்கு சிறுவாபுரி முருகன் கோயில் வழிபாடு |
| | மாலை 7.30 மணிக்கு சென்னை வந்தடைதல். |

கட்டணம் நபர் ஒருவருக்கு : ரூ. 725/–
போக்குவரத்து, தங்கும் வசதி மற்றும் வழிகாட்டி சேவை உட்பட்டது.

மேலும் விவரங்களுக்கு மேலாளர் (சுற்றுலா), தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலா வளாகம், எண்.2, வாலாஜா சாலை, சென்னை–2 மற்றும் தொலைபேசி எண்கள்: 2538 4444/2538 3333/2538 9857.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**